# 19

*சபை:*

# பிரசங்கியார், பொதுவான கலந்துரையாடல்

## அவருடைய முன்மாதிரி

1. ***பிலிப்பியர்கள் செய்யும்படிப் பவுல் கேட்டுக் கொண்ட இரு விஷயங்கள் யாவை (பிலி. 3:17)?***
2. ***பிரசங்கியார் எந்த அளவுக்குப் பின்பற்றப்பட வேண்டும் (1 கொரி. 11:1)?***
3. ***அவர் எவற்றைச் சிந்திக்க வேண்டும் (பிலி. 4:8)? பிலி. 4:8, 9ஐ மனப்பாடம் செய்யவும்.***

## எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு உற்சாகப் படுத்தப்பட வேண்டும்

1. ***புதிய ஊழிய இடங்களில் அப்பொல்லோ எவ்விதம் அறிமுகப்படுத்தப்பட்டார் (அப். 18:19)?***
2. ***கொலோசெயருக்கு மாற்குவைப் பரிந்துரைத்தது யார் (கொலோ. 1:1; 4:10)?***
3. ***எப்பாப்பிராத்தீத்து எதற்காகப் பிலிப்பி பட்டணத்துக்கு அனு ப்பப்பட்டார் (பிலி. 2:25-28)?***
   - *அ. அவர் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தார் (பிலி. 2:29)?*
   - *ஆ. அவர் கனம் பண்ணப்பட்டு நன்முறையில் வரவேற்கப்பட வேண்டியிருந்தது ஏன் (பிலி. 2:29, 30)?*
4. ***தீமோத்தேயு பிலிப்பி பட்டணத்துக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது ஏன் (பிலி. 2:19, 23)?***
   *பவுலினால் அவர் நிபந்தனையின்றிப் பாராட்டப் பெற்றது ஏன் (பிலி. 2:20-22)?*
5. ***பிரசங்கியார்களை ஜெபங்களில் நினைவு கூரவேண்டியது ஏன் (கொலோ. 4:3, 4)?***
6. ***வருத்தமான/கவலையான வேளைகளில் யாருடைய ஜெபங்கள் வேண்டப்படுகின்றன (ரோமர் 15:30, 31)?***

## அவர் சபைகளினால் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும்?

1. ***எல்லாருக்குமான கிறிஸ்துவின் கட்டாயமாகச் செய்யும்படியான கட்டளைகளைத் தருக (மத். 28:19; மாற். 16:15)?***
2. ***ரோமாபுரியில் இருந்த சபையாரிடம் பவுல் கேட்ட கேள்விகள் யாவை (ரோமர் 10:14, 15)?***
3. ***அந்தியோகியாவின் சபையாரால் அனுப்பப்பட்டவர்கள் யார் (அப். 13:1-3)? அவர்கள் யாருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருந்தனர் (அப். 14:26, 27)?***

## அவருடைய ஆதரவு

1. ***பிரசங்கியார்களை ஆதரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக (1 கொரி. 9:7).***
2. ***பிரசங்கியாரை ஆதரிப்பதற்கு 1 கொரி. 9:8, 9ல் உள்ள மாட்டின் விவரிப்பைத் தருக.***
3. ***பிரசங்கியாரை ஆதரிப்பதற்கு 1கொரி. 9:10ல் உள்ள பண்ணையின் விவரிப்பைத் தருக.***
4. ***"ஆவிக்குரிய" மற்றும் "உலகப்படியான" விஷயங்களைப் பற்றிய கருத்து யாது (1 கொரி. 9:11)?***
5. ***அவருடைய ஆதரித்தலுக்கு ஆசாரியர்களிடமிருந்து பெறப்பட்ட பாடம் என்ன (1 கொரி. 9:13)?***
6. ***தேவன் கட்டளையிட்டது என்ன (1 கொரி. 9:14)?***

## அவருடைய உரிமைகளும் சலுகைகளும்

1. ***தகுதியிருந்தால், அவர் தம் நேரம் முழுவதையும் பிரசங்கித்தலுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டுமா (அப். 6:1, 2, 4)?***
2. ***அவர் வேலை செய்யாதிருக்க உரிமை பெற்றுள்ளாரா (1 கொரி. 9:6)?***
3. ***பவுல் ஆதரவு பெறுவதற்கான தம் உரிமைகளைத் துறந்து விட்டது ஏன் (1 கொரி. 9:15, 18, 22)?***
   - *அ. ஒரு பிரசங்கியார் தம் சுய உதவிக்கென்று எப்பொழுது உழைக்க வேண்டும் (அப். 18:1-3; 20:34, 35)?*
   - *ஆ. பவுல் ஆதரவு பெறுவதற்கான தம் உரிமையைத் துறந்த பொழுது, எவ்வாறு சமாளித்துக் கொண்டார் (2 கொரி. 11:8)? அவரது குறைவுகளில் அவரை ஆதரித்தவர்கள் யார்? பவுல் ஏன் இவ்வாறு மாறினார் (2 கொரி. 11:9)?*
   - *இ. பவுல் ஆதரவு பெறுவதற்கான தம் உரிமையைத் துறந்தது ஏன் (2 கொரி. 11:12)?*
     *பவுல் இதைச் செய்ததால், சிலர் என்ன செய்தனர் (2 கொரி. 11:7; 12:13)?*

## ஆழ்ந்த சிந்தனைக்குச் சில விஷயங்கள்

1. **பிரசங்கியார் ஏதாவது உள்ளூர் சபையில் உறுப்பினராய் இருக்க வேண்டுமா?**
2. **அவர் எல்லா வேளைகளிலும் சபைக்குப் பணிந்திருக்க வேண்டுமா?**
3. **முழு நேரச் சுவிசேஷகர் யாருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்?**
   *ஏதேனும் உள்ளூர் சபையின் மூப்பருக்கு.*
4. **சபையானது பிரசங்கியாருக்கு உதவி செய்தால், அவருடைய நன்றியுணர்வு எப்படியிருக்க வேண்டும் (பிலி. 4:15, 16)?**
   *பவுல் தம் எல்லையற்ற மகிழ்வை மற்றவர்களிடம் எவ்வாறு வெளிப் படுத்தினார் (1 தெச. 1:2, 3)?*
5. **சபையானது (ஊழியத்திற்கென்று) பிரசங்கியாரை அனுப்பா விட்டால், எப்படியும் அவர் (பிரசங்கிக்கச்) செல்ல வேண்டுமா?**
6. **சபையானது பிரசங்கிக்க இளைஞர்களை எவ்விதம் பயிற்றுவித்து ஊக்குவிக்க வேண்டும்?**
7. **தேவையில் உள்ள வயதான பிரசங்கியார்களை சபை எவ்வாறு கவனித்துக் கொள்ள வேண்டும்?**
8. **சாத்தியப்பட்ட அதிக எண்ணிக்கையுள்ள ஆத்துமாக்களை இரட்சிக்க, பிரசங்கியார் என்ன செய்ய வேண்டும்?**
9. **பிரசங்கியார் தம் சுய தோற்றத்தை எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டும்?**
10. **அவர் தம் பேச்சையும் பழக்கங்களையும் எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டும் (கொலோ. 4:6)?**
11. **அவர் புகை பிடிக்கலாமா? திரைப்படங்களுக்குச் செல்லலாமா?**